**பிப்ரவரி – 08**

# TNPSC துளிகள்

- துறையூரில் உள்ள உலகளாவிய இயற்கை அறக்கட்டளையானது, தமிழ்நாடு பருவ நிலை உச்சி மாநாடு 3.0 நிகழ்வில் 'சுற்றுச்சூழல் சுடரொளி' விருதினை (இரண்டாம் பரிசு, அமைப்பு பிரிவு) பெற்றுள்ளது.
- சென்னையைத் தலைமையகமாக கொண்ட இந்தியன் ஓவர்சீஸ் வங்கி (IOB) ஆனது, கார்பன் கணக்கீட்டு நிதியியல் மீதான கூட்டாண்மையில் (PCAF) கையொப்பதாரராக மாறியுள்ளது.
- இந்தூருக்கு அடுத்தபடியாக, போபால் மாவட்ட நிர்வாகம் ஆனது மத்தியப் பிரதேச தலைநகரில் பிச்சை எடுத்தல், பிச்சை இடுதல் மற்றும் பிச்சைத் தொழில் செய்யும் நபர்களிடமிருந்து எந்தப் பொருட்களையும் வாங்குவதற்குத் தடை விதித்துள்ளது.
- உள்நாட்டில் விற்கப் படும் மொத்த கைபேசிகளில் 99.2% உற்பத்தி செய்யும் உலகின் இரண்டாவது பெரிய கைபேசி உற்பத்தியாளராக இந்தியா மாறியுள்ளது.
- தென்னாப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பர்க் நகரில் தெற்கு அரைக்கோளத்தின் மிகப் பெரிய இந்து கோயில் மற்றும் கலாச்சார வளாகம் திறக்கப்பட்டுள்ளது.
- மறைந்த சாமன் அரோரா, டோக்ரி மொழியில் எழுதப்பட்ட 'இக் ஹோர் அஸ்வதாமா' என்ற அவரது புத்தகத்திற்காக 2024 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாடமி விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- துபாய் 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முதலாவது உலகளாவிய நீதி, அன்பு மற்றும் அமைதி உச்சி மாநாட்டினை நடத்த உள்ளது.
- ஜவுளி அமைச்சகம் ஆனது, 'தொழில்நுட்பம் சார்ந்த ஜவுளித் துறையில் ஈடுபாடு மிக்க கண்டுபிடிப்பாளர்களுக்கு ஆராய்ச்சி மற்றும் தொழில்முனைவோருக்கான மானியம் (GREAT)' திட்டத்தின் கீழ் தோராயமாக 50 லட்சம் ரூபாய் மானியத்துடன் 04 புத்தொழில் நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- மகாராஷ்டிரா மாநிலமானது கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை மேம்படுத்தச் செய்வதற்காக இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவுப் பல்கலைக்கழகத்தினை நிறுவ உள்ளது.
- புது டெல்லி ஆனது சமீபத்தில் 15வது சர்வதேச உலக மருந்தியல் மீதான விதிமுறை தொகுப்புகள் கூட்டத்தினை நடத்தியது.
    - மருந்தியல் விதிமுறைத் தொகுப்புகள் என்பது ஒரு நாட்டில் பயன்படுத்தப்படும் மருந்துகளுக்கான தரநிலைகள் மற்றும் தர விவரக்குறிப்புகளின் சட்டப்பூர்வத் தொகுப்பாகும்.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாடு அரசாங்கத்தினால் கொள்முதல் செய்யப்பட்ட தானியங்கள்


- இந்த ஆண்டு 10,41, 583 மெட்ரிக் டன் தானியங்கள் கொள்முதல் செய்யப் பட்டுள்ளன என்ற நிலையில் இது கடந்த ஆண்டை விட 2,99,248 மெட்ரிக் டன் அதிகமாகும்.
- 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 04 ஆம் தேதி வரையில், 7,42,335 மெட்ரிக் டன் தானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டது.
- மாறாக, 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி 04 ஆம் தேதி வரை, சுமார் 10,41,583 மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது.

- 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 ஆம் தேதி முதல் A தர ரகங்களுக்கு 2,450 மற்றும் மிகப் பொதுவான ரகங்களுக்கு 2,405 ரூபாய் என்ற ஒரு அதிகரிக்கப்பட்ட விகிதத்தில் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.
- சுமார் 2,444 நேரடி கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டு அதற்கு வேண்டி 1,44,248 விவசாயிகளிடமிருந்து தானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.
- விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் 2,247.52 கோடி வைப்பு செய்யப்பட்டுள்ளது.




# தேசியச் செய்திகள்


## பெண் தொழிலாளர் வளத்தின் பங்கேற்பில் அதிகரிப்பு 2024




- கடந்த ஏழு ஆண்டுகளில் பெண் தொழிலாளர் வளத்தின் பங்கேற்பு விகிதத்தில் (FLFPR) நிலையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

- கடந்த ஏழு ஆண்டுகளில், 2017-18 ஆம் ஆண்டில் 23.3% ஆக இருந்த FLFPR ஆனது 2023-24 ஆம் ஆண்டில் 41.7% ஆக அதிகரித்துள்ளது.
- கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் உட்பட பல்வேறு பிரிவுகளில் பொருளாதாரம் மீதான நடவடிக்கைகளில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளது.
- தற்போது, 21 மாநிலங்களில் FLFPR 30 முதல் 40% வரையிலான வரம்பில் உள்ளது.
- ஏழு மாநிலங்கள் அல்லது ஒன்றியப் பிரதேசங்களில் 40 சதவீதத்திற்கும் அதிகமான FLFPR பதிவாகியுள்ளன என்ற நிலையில் சிக்கிம் மாநிலத்தில் அதிகபட்சமாக 56.9% விகித FLFPR பதிவாகியுள்ளது.
- 2017-18 ஆம் ஆண்டில், 20 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் சுமார் 20 சதவீதத்திற்கும் குறைவான FLFPR விகிதத்தினைக் கொண்டிருந்தன என்பதோடு 2023-24 ஆம் ஆண்டில் இது மூன்று மாநிலங்கள் மட்டுமே இந்த விகிதத்தினைக் கொண்டு இருந்தன.
- 2017-18 ஆம் ஆண்டில் சுமார் 24.6 சதவீதத்துடன், பெண்களின் தொழிலாளர் பங்களிப்பு அதிகரிப்பிற்கு முக்கிய உந்து சக்தியாக இருந்த கிராமப்புற FLFPR ஆனது, 2023-24 ஆம் ஆண்டில் 47.6% ஆக உயர்ந்தது.
- 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 31 ஆம் தேதி நிலவரப்படி, குறைந்தபட்சம் ஒரு பெண் இயக்குநரைக் கொண்ட மொத்தம் 73,151 புத்தொழில் நிறுவனங்கள் ஆனது இந்தியப் புத்தொழில் நிறுவனங்கள் முன்னெடுப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## இந்தியத் தேசியச் சின்னம் குறித்து உள்துறை அமைச்சகம்




- மத்திய உள்துறை அமைச்சகம் ஆனது, இந்தியத் தேசியச் சின்னத்தின் ஒரு தவறானப் பயன்பாடு மற்றும் முறையற்ற சித்தரிப்பினைத் தடுப்பதற்கு வேண்டி நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுகளிடம் கோரியுள்ளது.
- தேவநாகரி எழுத்து வடிவில் எழுதப் பட்ட சத்யமேவ ஜெயதே என்ற அந்த முழக்கம் இல்லாமல் நான்முக சிங்கத் ஸ்தூபி முத்திரை முழுமையடையாது என்பதை இது மிக வலியுறுத்துகிறது.
- 2005 ஆம் ஆண்டு இந்தியத் தேசியச் சின்னம் (முறையற்றப் பயன்பாட்டைத் தடை செய்தல்) சட்டத்தின் அட்டவணையின் I & IIவது பின் இணைப்புகளில் குறிப்பிடப் பட்டு ள்ள வடிவமைப்பிற்கு இணங்க இந்த வடிவமைப்பு இருக்க வேண்டும்.
- இந்தச் சின்னம் ஆனது, மையத்தில் ஒரு தர்மச் சக்கரம், வலதுபுறத்தில் ஒரு காளை,

இடது புறத்தில் ஒரு பாய்ந்து செல்லும் குதிரை மற்றும் கடைசி வலது மற்றும் இடது புறத்தில் தர்ம சக்கரங்களின் வெளிவரம்புகள் காணப்படுகின்ற விவரங்கள் கொண்ட பீடத்தில் மூன்று சிங்கங்கள் அமர்ந்திருக்கும் வகையிலான ஸ்தூபியைக் கொண்டு உள்ளது.

- மேலும், 'சத்யமேவ ஜெயதே' என்ற முழக்கம் ஆனது சிங்கத் தூபியின் வடிவத்திற்கு கீழே தேவநாகரி எழுத்து வடிவில் எழுதப்பட்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## ஐக்கிய நாடுகள் உரிமைகள் சபையில் இருந்து அமெரிக்கா விலகல்

- ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையுடனான அமெரிக்காவின் ஈடுபாட்டைத் துண்டித்து, ஐக்கிய நாடுகள் சபையின் பாலஸ்தீன அகதிகளுக்கான முகமையான UNRWA மீதான நிதித் தடையை நீட்டிப்பதற்கு அமெரிக்க அதிபர் திட்டமிட்டுள்ளார்.
- அமெரிக்காவின் அவ்வறிவிப்பையடுத்து இஸ்ரேலும் அமெரிக்காவுடன் இணைவதாக அறிவித்துள்ளது
- டிரம்ப் ஏற்கனவே உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் 2015 பாரிசு பருவநிலை உடன்படிக்கை ஆகியவற்றிலிருந்து அமெரிக்காவை விலக்கிக் கொண்டுள்ளார்.
- டிரம்ப் ஆட்சியானது, முன்னதாக 2018 ஆம் ஆண்டில் மனித உரிமைகள் சபையில் இருந்து அமெரிக்காவினை விலகச் செய்தது.





# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் தங்க முதலீடுகள் 2024


- 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, இந்தியாவில் தங்க முதலீடுகள் ஆனது 2024 ஆம் ஆண்டில் 60% அதிகரித்து, 18 பில்லியன் டாலர்களை (தோராயமாக 1.5 லட்சம் கோடி ரூபாய்) எட்டின.
- உலக தங்கச் சபையின் (WGC) அறிக்கையானது, தங்க முதலீட்டு தேவையானது 239 டன்களாக இருந்ததாகக் கூறுகிறது. மேலும், இது 2013 ஆம் ஆண்டிற்குப் பிறகு அதன்

மிக உயர்ந்த அளவைக் குறிக்கிறது.

- இது 2023 ஆம் ஆண்டில் பதிவான 185 டன்களிலிருந்து 29% அதிகரிப்பாகும்.
- சுமார் 239 டன்களில், நாட்டின் தங்க முதலீடு ஆனது, இந்தப் பிரிவில் உலகளாவியத் தேவையில் 20% ஆகும் என்பதோடு இது 2024 ஆம் ஆண்டில் 1,180 டன்களாக இருந்தது.
- 2023 ஆம் ஆண்டில் 945.5 டன்களாக பதிவான உலகளாவிய தேவையும் 25% அதிகரித்து உள்ளது.




## GDP மற்றும் கடன் விகிதம் - முதன்மை நிதி அளவீடு





- GDP - கடன் விகிதத்தை 2031 ஆம் ஆண்டிற்குள் சுமார் 50 சதவீதமாகக் குறைக்கும் மத்திய அரசின் ஒரு திட்டத்தினை மத்திய நிதிநிலை அறிக்கைக் குறிப்பிட்டுக் காட்டி உள்ளது.
- இது நடவடிக்கையின் முழுமை சார்ந்த இலக்கிலிருந்து ஒரு குறிப்பிட்ட, மதிப்பிடக் கூடிய அளவிலான இலக்கினை நோக்கிய மாற்றத்தைக் குறிக்கிறது.

- GDP மற்றும் கடன் விகிதம் ஆனது ஒரு நாட்டின் நிதி வளத்தினைக் குறிப்பதற்கு என்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிகாட்டியாகும்.
- இந்திய மத்திய அரசின் GDP மற்றும் கடன் விகிதம் ஆனது சரியான வரம்பில் உள்ளது.
- கனடா மற்றும் ஜெர்மனி நாடுகளைத் தவிர, G7 அமைப்பின் அதன் சக உறுப்பினர் நாடுகளுடன் ஒப்பிடச் செய்யும் போது, இந்தியாவின் GDP மற்றும் கடன் விகிதம் ஆனது குறிப்பிடத் தக்க அளவில் குறைவாக உள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## காஷ்மீரில் யூரேசிய நீர்நாய்கள்

- காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் யூரேசிய நீர்நாய்கள் கடந்த 3 ஆண்டுகளாக அங்கு மீண்டும் தோன்றியுள்ளன.
- கடந்த 25 ஆண்டுகளில், இந்த இனம் ஆனது முதல்முறையாக நேரடியாகப் பதிவாகி உள்ளது.
- 1997 ஆம் ஆண்டில், பிரபலமான தால் ஏரியின் உப்பங்கழிகளில் மக்கள் அவற்றைக் கண்டனர்.
- உள்ளூரில் வோடுர் என்று அழைக்கப்படும் யூரேசிய நீர்நாய்கள் முஸ்டெலிடே என்ற குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதோடு அவை நீர்நிலைச் சூழல்களைப் பகுதியளவு சார்ந்து வாழ்பவையாகும்.
- மீன்களை உண்கின்ற இந்த இனம் ஆனது மிகவ வளமான சுற்றுச்சூழல் அமைப்பைப் பேணுவதற்கு இன்றியமையாதது.
- IUCN அமைப்பானது 2004 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் யூரேசிய நீர்நாய்களை அதன் செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த இனமாகப் பட்டியலிட்டது.




# மாநிலச் செய்திகள்

## ‘திம்சா’ நடனம்

- ஆந்திரப் பிரதேசத்தின் அனகப்பள்ளி மாவட்டத்தில் உள்ள மலை உச்சியில் அமைந்த

ஒரு மிகவும் குக்கிராமமான நீலபந்தாவைச் சேர்ந்தப் பழங்குடியினக் குடும்பங்கள் சுதந்திரத்திற்குப் பிறகு முதல் முறையாக மின்சார வசதியினைப் பெற்றன.

- அவர்கள் மின்சார விளக்குகளைப் பெற்ற உற்சாகத்தில் 'திம்சா' என்ற பிரபலமானப் பழங்குடியின நடன நிகழ்ச்சியினை நிகழ்த்தியுள்ளனர்.
- திம்சா என்பது ஆந்திரப் பிரதேசத்தில் பகதா, வால்மீகி, போரஜா, கோண்ட், கடபா, கோண்டடோரா, முகடோரா மற்றும் கோட்டியா பழங்குடியினரால் நிகழ்த்தப்படும் ஒரு பிரபலமானப் பழங்குடியின நடனமாகும்.
- புராணங்கள், நாட்டுப்புறக் கதைகள், பொருளாதார நடவடிக்கைகள், உறவினர்கள் மற்றும் திருமண வாழ்க்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு கருப் பொருள்களுடன் கூடிய இந்த நடனம் ஆனது அவர்களது ஒற்றுமை மற்றும் கலாச்சாரப் பாரம்பரியத்தினை அடையாளப்படுத்துகிறது.
- இதில் சுமார் 12 வகையான திம்சா நடனங்கள் உள்ளன என்பதோடு இதன் தோற்றுரு கோண்ட் பழங்குடியினரின் தாயகமான கோராபுட் பகுதியைச் சேர்ந்ததாகக் கூறப் படுகிறது.
- ஒரு குழுவில் 20 பேர்களை உள்ளடக்கிய வகையில் மேற்கொள்ளப்படும் இந்த நடன முறையில் காற்று மற்றும் தாள வாத்தியங்களால் எழுப்பப்படும் இசைக்கு ஏற்ப அந்த நடனம் மாறுகிறது.


Dhimsa Dance is Performed by the Tribes of Andhra Pradesh

## பனிப்பாறைகள் இழப்பு - அருணாச்சலப் பிரதேசம்




- அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் கிழக்கு இமயமலையின் ஒரு பகுதியானது கடந்த

32 ஆண்டுகளில் 110 பனிப்பாறைகளை இழந்துள்ளது.

- 309.85 சதுர கி.மீ பரப்பளவைக் கொண்ட இந்தப் பனிப்பாறைகள் 1988 முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான ஆய்வுக் காலத்தில் 16.94 சதுர கி.மீ இழப்பு விகிதத்தில் அழிந்து உள்ளன.
- துருவப் பகுதிகளுக்கு அப்பால் மிகப்பெரிய பனிப்பாறைகளின் ஒரு தொகுப்பை இது கொண்டுள்ளதால், மிகப்பெருமளவில் பனியால் மூடப்பட்ட இந்த ஒரு இமயமலைப் பகுதியானது, 'மூன்றாம் துருவம்' என்று கருதப்படுகிறது.
- கீழ்மட்டப் பகுதிகளில் வசிக்கும் 1.3 பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு இது ஒரு நன்னீர் ஆதாரமாக செயல்படுகிறது.

## பீகாரில் மக்கானா வாரியம்

- பீகார் மாநிலத்தில் "தாமரை / மக்கானா விதை வாரியம்" நிறுவப்பட உள்ளதாக ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.
- இது தாமரை விதையின் உற்பத்தி, பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டல் மற்றும் அதன் சந்தைப் படுத்தலை மேம்படுத்தும்.
- பீகார் மாநிலமானது இந்தியாவின் தாமரை விதை உற்பத்தியில் சுமார் 90% அளவில் பங்கினைக் கொண்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில், 'மிதிலா மக்கானா' ரகமானது புவிசார் குறியீட்டினை (GI) பெற்றது.




# முக்கிய தினங்கள்

## சர்வதேச மேம்பாட்டு வாரம் - பிப்ரவரி 02 முதல் 08 வரை

- பிப்ரவரி மாதத்தின் முதல் வாரம் முழுவதும், சர்வதேச மேம்பாட்டு வாரம் (IDW) என்பது

கொண்டாடப்படுகிறது.

- உலகளாவிய மேம்பாட்டிற்கு என்று மக்களின் பங்களிப்புகள் குறித்து பயிற்றுவித்தல், மேம்படுத்துதல், ஈடுபடுத்தல் மற்றும் அந்த பங்களிப்புகளை நினைவு கூருவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Building a better world together" என்பதாகும்.




## இதரச் செய்திகள்

### இராணுவத்தின் கிழக்குத் தலைமையகம் - வில்லியம் கோட்டை




- கிழக்கு ராணுவப் படைப் பிரிவின் படைத் தலைமையகமான கொல்கத்தாவில் உள்ள வில்லியம் கோட்டைக்கு விஜய் துர்க் என மறுபெயரிடப்பட்டுள்ளது.
- மேலும், வில்லியம் கோட்டையில் உள்ள கிச்சனர் இல்லம் மானெக்சா இல்லம் எனவும், முன்னர் செயிண்ட் ஜார்ஜ் நுழைவு வாயில் என்று அழைக்கப்பட்ட தெற்கு வாயில் ஆனது தற்போது சிவாஜி நுழைவு வாயில் எனவும் மறுபெயரிடப்பட்டுள்ளன.

- இங்கிலாந்து நாட்டின் மூன்றாம் மன்னர் வில்லியமின் பெயரிடப்பட்ட வில்லியம் கோட்டையானது, 1781 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களால் கட்டமைக்கப்பட்டது.
- விஜய் துர்க் என்ற புதிய பெயர் ஆனது, மகாராஷ்டிராவின் சிந்துதுர்க் கடற்கரையில் உள்ள பழமையான கோட்டையிலிருந்து பெறப்பட்டது.
- இது சத்ரபதி சிவாஜி அவர்களின் கீழான மராட்டியர்களின் ஒரு கடற்படைத் தளமாகச் செயல்பட்டது.


## உள்நாட்டு விமானங்களில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

**Air Passenger Market in Detail - 2024**

| 2024 (% YEAR-ON-YEAR) | WORLD SHARE[1] | RPK | ASK | PLF(%-PT)[2] | PLF(LEVEL)[3] |
|---|---|---|---|---|---|
| **Total Market** | **100%** | **10.4%** | **8.7%** | **+1.3%** | **83.5%** |
| Africa | 2.2% | 13.2% | 9.9% | +2.2% | 74.9% |
| Asia Pacific | 33.5% | 16.9% | 12.3% | +3.2% | 83.4% |
| Europe | 26.7% | 8.7% | 8.1% | +0.5% | 84.8% |
| Latin America | 5.3% | 7.8% | 7.1% | +0.6% | 83.7% |
| Middle East | 9.4% | 9.5% | 8.4% | +0.8% | 80.8% |
| North America | 22.9% | 4.6% | 4.6% | 0.0% | 84.3% |

- இந்தியாவின் உள்நாட்டு விமானங்கள் ஆனது 2024 ஆம் ஆண்டில் சுமார் 86.4 சதவீத அளவில் பயணிகள் எண்ணிகையினை எட்டின என்பதோடு இது உலகளவில் மிகவும் உயர்ந்தபட்ச எண்ணிக்கை யாகும்.
- இது இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைப் பிடித்த அமெரிக்கா (84.1 சதவீதம்) மற்றும் சீனாவை (83.2 சதவீதம்) விஞ்சியது.
- பிரேசில் சுமார் 81.9 சதவீதப் பயணிகள் எண்ணிக்கையுடன் நான்காவது இடத்தைப் பிடித்தது.
- அதைத் தொடர்ந்து 81.8 சதவீதத்துடன் ஆஸ்திரேலியாவும், 78 சதவீதத்துடன் ஜப்பான் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

## கேரளாவில் புருசெல்லோசிஸ் பாதிப்பு




- கேரளாவின் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள கோட்டக்கல்லைச் சேர்ந்த எட்டு வயது சிறுமி புருசெல்லோசிஸ் பாதிப்பு காரணமாக உயிரிழந்துள்ளார்.
- புருசெல்லோசிஸ் என்பது பெருமளவில் கால்நடைகள், பன்றிகள், ஆடுகள், செம்மறி

ஆடுகள் மற்றும் நாய்கள் ஆகியவற்றினை மிகவும் பாதிக்கின்ற பல்வேறு புருசெல்லா இனங்களால் ஏற்படும் ஒரு பாக்டீரியா நோயாகும்.

- பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் நேரடித் தொடர்பு மூலமாகவோ, அசுத்தமான விலங்கு இறைச்சிகளை சாப்பிடுவதன் மூலமாகவோ அல்லது அசுத்தமான விலங்குகளில் இருந்துப் பெறப்படும் பாலினைக் குடிப்பதன் மூலமாகவோ அல்லது காற்றில் பரவும் பாக்டீரியங்களை உள்ளிழுப்பதன் மூலமாகவோ மனிதர்கள் இந்தத் தொற்றினால் பாதிக்கப்படுகின்றனர்.
- பெரும்பாலான இந்தப் பாதிப்புகள் ஆனது, பாதிக்கப்பட்ட ஆடுகள் அல்லது செம்மறி ஆடுகளிலிருந்து பெறப்பட்ட பதப்படுத்தப்படாத பால் அல்லது பாலாடைக்கட்டிகளை உட்கொள்வதன் மூலம் ஏற்படுகின்றன.
- ஆனால் இந்த ஒரு நோயானது மனிதனிடமிருந்து மனிதனுக்கு மிகவும் அரிதாகவே பரவுகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★